பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 18 வியாழக்கிழமை (03-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 251

# தீர்வுத் திட்டம் இன்று அறிவிப்பு: கொழும்பில் பெரும் பதற்ற நிலை!

## முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்

கொழும்பு, ஓகஸ்ட் 3

இனப்பிரச்சினைக்கான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் தீர்வு யோசனைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று உத்தியோகபூர்வமாக வெளியிடுவதை ஒட்டி, அந்தத் தீர்வு யோசனைகளை எதிர்க்கும் சிங்கள இனவாதக் கடும் கோட்பாட்டாளர்கள் தலைநகர் கொழும்பில் வன்செயலில் இறங்கலாம் என அஞ்சப்படுகின்றது. இதனால் அங்கு பெரும் பதற்றநிலை உருவாகியிருக்கிறது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தலைநகரில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு செய்துள்ளது.

அரசின் தீர்வுத் திட்ட யோசனைகளுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தலைநகரில் அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என்ற காரணத்தால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலதிக துருப்புகள் தலைநகரில் குவிக்கப்பட்டுள்ளதாகவும்—

வீதிச் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும்—

கனரக ஆயுதங்கள் சகிதம் தலைநகரில் நடமாடும் இராணுவத்தினர் நகருக்குள் பிரவேசிக்கும் சகல வாகனங்களையும் கடுமையாகச் சோத

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வேறு பெயரில் ஈழத்தை வழங்க அரசு முற்படுகிறது

### மகாசங்கத்தினர் அறிக்கை

கொழும்பு, ஓக. 3

வேறு பெயரில் ஈழத்தை வழங்க அரசு முற்படுகிறது. வடக்கு - கிழக்குப் பிரச்சினை தொடர்பாக அரசு தன்னிச்சையாகச் செயற்பட முற்பட்டால் ஆயிரக்கணக்கான பௌத்த பிக்குகள் உயிர்த்தியாகம் செய்யத் தயாராக உள்ளனர்.

— தென் பகுதி பௌத்த பிக்குகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வில்பத்து சரணாலய படை முகாம் மூடப்பட்டது!

வில்பத்து வனவிலங்கு சரணாலயத்தின் எல்லையில் அமைந்திருந்த இராணுவ முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி அந்த முகாமை விட்டுப் படையினர் வெளியேறினர்.

[6 ஆம் பக்கம் பார்க்க

# வடமராட்சி கடலில் இருந்து அகோர பீரங்கித் தாக்குதல்

## 7 பேர்காயம்! கோவில்கள், ஆஸ்பத்திரி சேதம்!!

வல்வெட்டித்துறை, ஓக. 2

வடமராட்சி கடற்பகுதியில் இருந்து குடியிருப்பு பகுதிகள் மீது நேற்றுக் காலை கடற்படையினர் நடத்திய கண்மூடித்தனமான அகோர பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்களினால் பொது மக்களில் 7 பேர் காயமடைந்தனர். வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள், ஆஸ்பத்திரி என்பன சேதமடைந்தன.

நேற்றுக் காலை ஏழு மணியளவில் வெற்றிலைக்கேணிப் பகுதியில் இருந்து கடற்படையின் 'வீரயா' தாய்க்கப்பலும் மூன்று தரையிறக்கும் கப்பல்களும் காங்கேசன் துறைப் பகுதியை நோக்கிச் சென்றன. சுமார் 15 கடற்படைப் படகுகள் அவற்றுக்குப் பாதுகாப்பளித்துச் சென்றன.

இவற்றில் இருந்தே கடற்படையினர் வடமராட்சிப் பகுதி மீது பலத்த ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

சுமார் ஒன்றரை மணிநேரம் நீடித்த இத்தாக்குதல்களினால் மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

### காயமுற்றோர்

நேற்றைய தாக்குதல்களில் காயமடைந்தவர்களில் நால்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வீரயாவைச் சுற்றி கடலுக்குள் தாக்குதல்!

வல்வெட்டித்துறை, ஓக. 3

நேற்று தாய்க்கப்பலான 'வீரயா' வுக்குப் பாதுகாப்பாக வந்த கடற்படையினரின் சுமார் 15 படகுகள் வீரயாவைச் சுற்றி கடலுக்குள்ளும் தாக்குதல் நடத்தின.

கடற்கரும்புலிகள் நீருக்குள்ளால் வந்து வீரயாவை குண்டு வைத்து தகர்த்து விடலாம் என்ற அச்சமே இதற்குக் காரணம் ஆகும்,

கடற்படையினரின் பாரிய கப்பல்கள் பல இந்த முறையிலேயே தகர்த்து அழிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(இ-155)

## முகாமில் குண்டு வெடித்து சிப்பாய் பலி!

கொழும்பு, ஓக. 3

மட்டக்களப்பு புளியந்தீவு மூன்றாவது இராணுவப் பிரிவின் முகாமில் குண்டு ஒன்று வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார்.

லான்ஸ் கோப்ரல் ஏ. கே. ஜி. எஸ். குலதுங்கா என்பவரே பலியானவராவார்.

நேற்று முன் தினம் காலை 9 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது

இக் குண்டு வெடிப்பினால் முகாமில் இருந்த காவலரணின் ஒரு பகுதி சேதமடைந்தது.

(ஐ)

## 16 இடங்களில் நேற்றுமுதல் ராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஓக. 3

இராணுவத்துக்கு ஆட்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் 16 நிலையங்களில் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளன.

எதிர்வரும் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு 6 மாத கால பயிற்சி வழங்கப்படும்.

அதன் பின்னர் அவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பப்படுவர்.

(ஐ-3)

## எஞ்சிய வினாத்தாள்கள் ஞாயிறு வரும்

யாழ்ப்பாணம், ஓக. 3

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி. சி. ஈ. உயர் தரப் பரீட்சைக்கான 2 ஆம், 3 ஆம் தொகுதி வினாத்தாள்கள் எதிர்வரும் ஞாயிறன்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள 'ஹபரண' கப்பலில் இந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

### கண்ணிவெடிக்கு மேலால்

## கேணல் ரத்னசபாபதியின் ஜீப் பலமுறை சென்றது

### ஆனால் அங்கம்மனவே சிக்கினார்

கொழும்பு, ஓக. 3

மட்டக்களப்பு இராணுவத் தளபதி பிரிகேடியர் நவின் அங்கம்மனவைப் பலி கொண்ட கண்ணி வெடி புதைக்கப்பட்ட பகுதிக்கு மேலாக வாழைச்சேனை பிரிகேட் தளபதி கேணல் ரத்னசபாபதியின் வாகனம் பலதடவைகள் சென்றது. ஆனால் அங்கம்மனவின் வாகனம் அப்பகுதியைக் கடந்தபோதே கண்ணி வெடி வெடிக்க வைக்கப்பட்டது.

கொழும்புப் பத்திரிகை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சி பிரதிநிதிகளுக்கு சந்திரிகா விளக்கினார்

கொழும்பு, ஓக. 3

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முன்வைத்துள்ள உத்தேச திட்டம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா நேற்று அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தார்.

நேற்றுக்காலை அரசில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சுவிஸ் நாடுகடத்திய தமிழ் வாலிபர் கொழும்பில் கைதாகி விசாரணை!

கொழும்பு, ஓக. 3

சுவிஸில் இருந்து நாடு கடத்தப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் கொழும்பில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

## வல்லைவாசிக்கு ஏற்பட்ட அனுபவம்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுந்தரம் தவா என்ற இளைஞருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது

கடந்த மாதம் 21 ஆம் திகதி சுவிஸில் இருந்து எயர் லங்கா விமான மூலம் அனுப்பப்பட்ட இவர் மறுநாள் கட்டுநாயக்கா வந்தடைந்தார்.

அவர் தமக்கு நேர்ந்த அனுபவம் குறித்து தெரிவித்திருப்பதாவது:-

நான் சுவிஸில் 1991 ஆம் ஆண்டு முதல் வேலை செய்து வந்தேன். எனது அகதி அந்தஸ்து கோரிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதால் நாட்டை விட்டு வெளியேறுமாறு கடிதம் எனக்கு அனுப்பப்பட்டது.

விருந்தினர் விடுதி ஒன்றின் சமையல் பகுதியில் பணியாற்றிய எனக்கு அன்றிலிருந்து அந்த வேலையும் பறிபோனது.

அகதி அந்தஸ்து கிடைக்காதவர்களுக்கு உதவும் பணிமனை ஒன்றில் சில காலம் தங்கியிருந்தேன்.

### சிறையில் அடைக்கப்பட்டேன்

ஜூன் மாதம் 21 ஆம் திகதி சுவிஸ் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு 21 நாள்கள் சிறையில் அடைக்கப்பட்டேன்

இலங்கைக்கு என்னைத் திருப்பி அனுப்ப பொலீஸார் முயற்சித்தபோது அங்கு சென்றால் எனது உயிருக்கு ஆபத்து என்று கூறி வாதாடினேன். மன்றாடிக் கேட்டும் அவர்கள் இரக்கம் காட்டவில்லை.

என்னை பலாத்காரமாக திருப்பி அனுப்புவதை எதிர்த்து உடலில் பல காயங்களை ஏற்படுத்தினேன். அந்த முயற்சியாலும் தோல்வியே ஏற்பட்டது.

நான் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டு கொழும்பு வந்தடைந்து 'ஓட்டோ' ஒன்றில் சென்று கொண்டிருந்த சமயம் பாலத்துறை பாலத்துக்கு அருகே 'ஓட்டோவை' மறித்த இராணுவத்தினர் விசாரணைக்கென என்னை அவர்களின் வாகனத்தில் ஏற்றினார்கள்.

### கண்கள் கட்டப்பட்டன

அப்போது என் கண்கள் இரண்டையும் துணி ஒன்றினால் கட்டி விட்டனர். என்னிடம் இருந்த 200 சுவிஸ் பிராங்குகளையும் படையினர் கைப்பற்றினர்.

ஓரிடத்தில் வாகனம் நிறுத்தப்பட்டது. என்னை கொண்டு சென்று விசாரித்தனர். "வல்வெட்டித்துறை வாசியான நீ பிரபாகரனின் சொந்தக்காரனா.. புலிகள் இயக்கத்தில் இருந்தாயா? என்று கேட்டு அச்சுறுத்தினர். சுட்டு விடுவோம் என்று பயமுறுத்தினர்.

பின்னர் கொட்டாஞ்சேனைப் பொலீஸில் என்னை ஒப்படைத்தனர். பொலீஸார் என்னை விசாரணை செய்தனர். அன்றிரவு முழுவதும் தடுத்து வைக்கப்பட்டேன். மறுநாள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டேன். வெலிக்கடைச்சிறைச் சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டேன்.

27 ஆம் திகதி நீதிமன்ற விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டேன் — என்றார். (ஐ)

## சென். ஜோன்ஸ் முதலுதவி பிரிவினருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 3

சென். ஜோன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவைச் சேர்ந்த ஆணையாளர்கள், அத்தியட்சகர்கள், உத்தியோகத்தர்கள் பொறுப்பாசிரியர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கான சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)


உடுப்பிட்டி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

## கேள்விக் கூறு கோரல்

எமது சங்கத்தால் அமைக்கப்படவுள்ள வெதுப்பகத்திற்கு பின்வரும் விடயங்களையொட்டி கேள்விக் கூறுகள் கோரப்படுகின்றன.

01. வெதுப்பக போறணை அமைத்தல் கூலி. (13'X13')

சகல மூலப் பொருள்களும் வழங்கப்படும். அமைக்கும் கூலியும் அமைக்க எடுக்கும் காலமும் கேள்விக் கூறில் தெரிவிக்கப்படல் வேண்டும்.

02. வெதுப்பக போறணை அமைத்தல் கூலியும் மூலப் பொருளும் (13' X 13')

மூலப் பொருள்களை கேள்விக் காரரே தருவித்து அதற்கான கேள்விக் கூறையும் அமைக்கும் கூலிக்கான கேள்விக்கூறையும் தெரிவிக்கப்படல் வேண்டும். அமைக்கும் மூலப் பொருள்களின் விவரத்தையும் அவற்றின் விலையையும் தனித்தனி கேள்விக்கூறில் குறிப்பிடப்படல் வேண்டும். அத்துடன் அமைக்க எடுக்கும் காலத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

03. போறணை அமைக்கும் சிறிய செங்கல்லும் நெருப்புக் கல்லும் வழங்கல்

எமது சங்கத்திற்கு வெதுப்பக போறணை அமைக்க 10,000 சிறிய செங்கல்லும் 500 நெருப்புக் கல்லும் தேவை. இவற்றை வழங்க விரும்புவோர் அவற்றை சங்கத்திற்கு கொண்டு ஒப்படைக்க உரிய கேள்விக்கூறு கோரப்படுகின்றது.

தேவையான மேலதிக விவரங்களை சங்கத்தில் வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விக் கூறுகளை 09-08-95ஆம் திகதிக்கு முன்னர் பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், உடுப்பிட்டி என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.

கேள்விக் கூறுகளை ஏற்கும் நிராகரிக்கும் உரிமை சங்கத்திற்கு உண்டு.

— பொது முகாமையாளர்.

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி.
02-08-95. [சி-1981]


## நல்லூர் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 3

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தின் 3 ஆம் நாளான இன்று ஆலய சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்:-

★ நாவலர் மணி மண்டப முன்றிலில் —

மாலை 6 மணி முதல் 7 மணி வரை செல்வி துஷ்யந்தி சிவனேசனின் பாட்டு.

7 மணி முதல் 8-30 மணி வரை ஜி சாந்தனின் பாட்டு.

★ நல்லை ஆதீனகளா மண்டபத்தில் —

காலை 9 மணி முதல் 12 மணி வரை, பண்டிதர் நா. இராசையா, வித்துவான் இ. திருநாவுக்கரசு ஆகியோரின் சமயப் பேருரைகள்.

★ மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் —

மாலை 5-30 மணிக்கு பிரம்ம ஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் "விஷ்ணு பாகவதம்" தொடர் இசைப் பேருரை. (எ-111-30)

## சிறப்பு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ். மாவட்டத்தில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் கிராமியத் தொழிலாளர்களுக்கான போர்க்கால சிறப்புக் கலந்துரையாடல்கள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி பகுதிகளுக்கான கலந்துரையாடல் இப்பகுதி சிகை அலங்கரிப்பாளர் சங்க அலுவலகத்தில் இன்று வியாழன் மாலை 5 மணிக்கும் —

வடமராட்சி பகுதிக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 7 ஆம் திகதி மாலை 4மணிக்கு மாலுசந்தி சதாபொன்ஸ் கல்வி நிலையத்திலும் —

வலிகாமம் கோட்டத்துக்குரிய கலந்துரையாடல் எதிர்வரும் 11 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

மேற்குறிப்பிட்ட சகலரையும் இவற்றில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட சிகையலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியச் செயலாளர் திரு. அன்ரன் இராசநாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)

## ராணுவ அதிகாரிகள் தளுவத்த மீது பாய்ச்சல்

கொழும்பு, ஓக. 3

எந்தவித முன்னறிவிப்பும் இன்றி கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து ராணுவம் பின்வாங்கியதால் "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் றோஹான் தளுவத்த மீது இராணுவ அதிகாரிகள் சீறி விழுந்ததாக "ராவய" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குடாநாட்டில் அடுத்து மேற்கொள்ளப்படலாம் என்று நம்பப்படும் ராணுவ நடவடிக்கைக்கான பொறுப்பை மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனிவிரத்னாவிடம் ஒப்படைக்க அரசாங்கம் உத்தேசித்து வருவதாகவும்—

ஆனால் மேஜர் செனிவிரத்னா அந்தப் பொறுப்பை ஏற்பது கேள்விக்குறி என்றும்— "ராவய" மேலும் தெரிவிக்கிறது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு கூடிய படைப் பலமும் நீண்ட கால அவகாசமும் கோரியதை அடுத்தே செனிவிரத்னாவுக்குப் பதிலாக தளுவத்த நியமிக்கப்பட்டது தெரிந்ததே. (இ-10)

## லியோ கழக உறுப்பினருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 3

நல்லூர் உற்சவகால செயற்திட்டம் ஒன்றுக்காக யாழ். மத்திய கல்லூரி லியோ கழக அங்கத்தவர்களையும், கழக இயக்குநர் சபை உறுப்பினர்களையும் இன்று பிற்பகல் 3மணிக்கு உற்சவ கால காவல்துறைப் பணிமனைக்கு முன்பாக சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். [ஐ]


## ஜெனரேட்டர் விற்பனைக்கு

சிறிது காலம் பாவித்த — நல்ல நிலையில் உள்ள— 2 KV யமஹா (EF 2000 HK) ரக ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவும்:-

விளம்பர இல:- 818
மே/பா "உதயன்"
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

(சி/1987)



## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 29 — 10 — 1958

உதிர்வு: 09 — 08 — 1989

டாக்டர்
செல்வி கலா சிங்கநாயகம்
(B.S.M.S. யாழ். பல்கலைக்கழகம், கைதடி)

திதி: 03 — 08 — 1995

கருவிலே திருநிறைந்த எம் செல்வமே!
அரும்பாகி, மொட்டாகி அழகான பூவாகி, பிஞ்சிலே
உதிர்ந்த எம் தெய்வமே! ஆண்டுகள்
ஆறானாலென்ன? நூறானாலென்ன?
மாறாது என்றுமே உன் நினைவுகள்
எங்கள் மனத்திரையினிலே!
சாந்தி! சாந்தி!! ஓம் சாந்தி!!

என்றும் உன் நினைவுகளில் வாழும்:
தாய், உடன் பிறப்புகள்.

வசாவிளான். (37845)



## தனியார் தொழிற்பயிற்சிக் கல்லூரிகளின் ஒன்றியம்

யாழ். மாவட்டம்

தேசிய பாதுகாப்பு நிதி சேகரித்தல் தொடர்பாக தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தலைமையில் எதிர்வரும் 4-8-95 (வெள்ளி) பி. ப. 3 00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் எமது ஒன்றிய அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

செயலாளர்

(சி/1986)

ரயில் பாதையில் பதுங்கியிருந்த

# படையினர் தீர்த்த வேட்டில் 2 ஊர்காவலர் படுகாயம்

கொழும்பு, ஓக. 3

தமிழில் உரையாடியபடி கடமையில் ஈடுபட்டிருந்த ஊர்காவல் படையினர், அருகில் மறைந்திருந்த இராணுவத்தினர் மீது டோர்ச் லைற் வெளிச்சத்தைப் பாய்ச்ச, அதனால் பயந்த படையினர், ஊர்காவலர் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் இருவர் கடும் காயங்களுக்கு உள்ளாகினர்.

இச் சம்பவம் அண்மையில் புத்தளம், கொச்சிமடுவில் இடம்பெற்றது.

இப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் சிலர் நடமாடுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து, அவர்களைத் தேடி ஊர்காவல் படையினர், ரோந்து புறப்பட்டனர். அச் சமயம், இரவு ரோந்தில் ஈடுபட்டிருந்த சுமார் 30 இராணுவத்தினர் அங்குள்ள ரயில் பாதைக்கு அருகில் பதுங்கி இருந்தனர்.

அப் பாதையால் சந்தேகநபர்களைத் தேடி வந்த ஊர்காவலர்கள், தமிழில் உரையாடியபடி, நாலாபுறமும் டோர்ச் லைற் அடித்தபடி வந்தனர்.

இவர்கள் யார் என்பதை அறியாத, மறைந்திருந்த படையினர், பயத்தின் காரணமாக இவர்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதனால் ஊர்காவலர்கள் இருவர் கடும் காயங்களுக்கு உள்ளாகினர். (ஒ-எ)

# புலிகள் வந்திருப்பதாக கூறி தமிழர் மீது அச்சுறுத்தல்

## பதுளை எஸ். பியிடம் முறைப்பாடு

பதுளை, ஓக. 3

ஹாலி-எல போகாமடத்த பகுதியில் வாழும் தமிழ் மக்களை சில தீய சக்திகள் அச்சுறுத்தி வருகின்றன.

புலிகள் வந்திருப்பதாகவும் இப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் "புலிகள்" என்று கூறியுமே தீயசக்திகள் அவர்களை அச்சுறுத்தி வருகின்றன.

இவ்வாறு இ. தொ. கா பதுளை மாவட்ட அரசியல் பிரிவு அமைப்பாளர் திரு எம் எஸ். முத்தையா பதுளை பொலீஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹாலி-எல போகாமடத்த பகுதியில் சில தமிழ்க் குடும்பங்கள் தனித்தனியாக ஆங்காங்கே நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றன என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஒ)

### கிணற்றில் விழுந்து சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 3

கிணற்றில் தண்ணீர் அள்ளும் போது தவறிவிழுந்து மரணமானதாக சிறுமியின் சடலம் ஒன்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கோப்பாய் தெற்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரத்தினசிங்கம் சுகுணா [வயது 11] என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

மரணவிசாரணையின் பின் சடலம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. [இ-13-15]

தமிழகத்தில் திராவிடர் கழகம்

# ஈழத் தமிழருக்கு ஆதரவாக கையெழுத்து வேட்டை

கொழும்பு, ஓக 3

இலங்கையில் இராணுவம், தமிழர்கள் மீது மேற்கொள்ளும் தாக்குதல்களை நிறுத்தக் கோரி கையெழுத்து வேட்டை ஒன்றை, திராவிடர் கழகம் நடத்தவுள்ளது.

சுமார் ஒரு கோடி கையெழுத்துக்கள் இதற்கென பெறப்படவுள்ளன.

தமிழர் மீதான கொலைகளை நிறுத்தக் கோரும் இக் கையெழுத்து வேட்டை நிறைவு பெற்றதும் அது ஐ. நா செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும்—

பிரதி இந்திய அரசுக்கு அனுப்பப்படும் என்றும் கட்சிப் பிரமுகர் திரு. கே. வீரமணி தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறும் இன அழிப்பு நடவடிக்கை பற்றி தமிழ்நாடு அரசு மௌனம் சாதிக்கக் கூடாது; அதனைத் தடுத்து நிறுத்த முயல வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-எ)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### கதறும் ஒலி கேட்கலையோ?

பந்தபாசம் தொலையுது இங்கு
பற்றறுந்து பறக்குது வாழ்வு
எந்த மனம் நிம்மதியாய்
நீட்டி நிமிர்ந் துறங்கு தின்று?
குந்துகின்ற குடி மனைகள்
கொழுந்து விட்டெரியுது நல்லைக்
கந்தனே உன் வேல்தான் எங்கே;
கதறும் ஒலி கேட்கலையோ?

வந்தவினை முடித்தவன் நீ
வரும் துயர்கள் தகர்ப்பவன் நீ
செந்தமிழின் முதல் மகன் நீ
செருக்களத்தே வேலெறிந்து
இந்தவினை அறுப்பதற்கு
இன்னும் காலம் வரவிலையோ?
அந்தமட்டும் அகதியென
அலைவதுதான் தலைவிதியோ?

— நெடுந்தீவு லக்ஸ்மன்

78 ச. கி. மீற்றருக்கு 10 ஆயிரம் பேர் போதாதென்றால்

# குடாநாட்டை கைப்பற்றி தக்கவைக்க 80 ஆயிரம் படையினராவது தேவை!

## ராவய பத்திரிகை கிண்டல்

கொழும்பு, ஓக. 3

78சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கைப்பற்றி தக்கவைக்க 10ஆயிரம் படையினர் போதாது எனில் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் கைப்பற்றித் தக்கவைக்க குறைந்தது 80 ஆயிரம் படையினர் தேவை.

பொறுப்பு வாய்ந்தோர் மக்களுக்கு பொய் கூற முயலக் கூடாது 10 ஆண்டுகளுக்கு மேலாக ஐ. தே. க. அரசினால் மேற்கொள்ள முடியாத முயற்சியை ஒரு சில தினங்களில் எவ்வாறு பொது மக்கள் ஐக்கிய முன்னணியினால் நிறைவேற்றமுடியும்?

— இவ்வாறு "ராவய" பத்திரிகையில் வெளியான கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"முன்னேறிப்பாய்தல்" ராணுவநடவடிக்கையின் உண்மைநிலை என்ற தலைப்பில் "ராவய" பத்திரிகையில் வெளியான அந்தக் கட்டுரையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

இராணுவத் தலைவர்களின் கருத்துப்படி 'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையின் ஒரு நோக்கம் விடுதலைப் புலிகளை முடிந்தளவு கொன்று ஒழிப்பதாகும் 90 விடுதலைப் புலிகளை இந் நடவடிக்கையின் போது கொன்றதாகக் கூறுகிறார்கள்.

இராணுவத்தின் மதிப்பீட்டை உண்மை என ஏற்றுக் கொண்டாலும் அதற்காக அரசுதரப்பு இழந்தவை கொஞ்சநஞ்சமல்ல.

ஒரு விமானமும் ஒரு கப்பலும் இழக்கப்பட்டுள்ளன.

9 அதிகாரிகளும் 87சிப்பாய்களும் பலியாகியுள்ளனர்.

காணாமற்போன படையினர் பற்றிய விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

18 அதிகாரிகளும் 343 சிப்பாய்களும் காயமடைந்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட 78சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை தக்கவைக்க 10ஆயிரம் படைவீரர்கள் போதாது எனில் வடபகுதி முழுவதையும் கைப்பற்றி அங்கு நிலைகொள்ள எவ்வளவு படைவீரர்கள் தேவை என்பதே கேள்வி.

இப்படி 'ராவய'' தெரிவித்துள்ளது [இ-10]

யுத்தம் தொடர்ந்தும் நீடித்தால்

# 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி

## அமைச்சர் மங்கள சமரவீர

கொழும்பு, ஓக 3

யுத்தம் நீடிக்கப்பட்டால் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கட்டாய இராணுவ சேவையில் ஈடுபட வேண்டிவரும்.

அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நடந்த பத்திரிகையாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசின் சமாதானத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் யுத்தம் தொடர வேண்டும் என விரும்புபவர்களே.

யுத்தம் தொடருமானால் ஏழைகளின் பிள்ளைகள் மாத்திரமன்றி வெளிநாடுகளில் பிள்ளைகளை தங்க வைத்து விட்டு கொழும்பில் வாழ்வோரும் தங்கள் பிள்ளைகளை யுத்தத்தில் ஈடுபடுத்த வேண்டிவரும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் குரல் வானொலியில்

03 – 08 – 1995

வியாழன் இரவு

★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — நோய்தீர்க்கும் மூலிகைகள்
★ 8-20 — .ழைப்போம் உயர்வோம் — 'கிராமிய நிதியம்' சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — மொழியும் வாழ்வும்
★ 8-50 — எங்களின் தேசம்

04 – 08 – 1995

வெள்ளி காலை

★ 7-02—மாவீர வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகை செய்திகள்
★ 7-45 — தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலியில்

வியாழன் மாலை

★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — இசையும் கதையும்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — பொன்விளையும் பூமி
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — கேள்வி — பதில் — விளையாட்டுத் தொடர்பானவை

# தூத்துக்குடி பகுதி கடலில் பிடிபட்ட இலங்கைப் படகு

தூத்துக்குடியில் இருந்து சுமார் 150 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கடற்பரப்பில் சந்தேகத்திற்குரிய இலங்கைப் படகு ஒன்றினை இந்திய கடலோரக் காவற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

படகில் இருந்த 5 மீனவர்களைப் படையினர் கைது செய்துள்ளனர் மீனவர்கள் வைத்திருந்த 70 கிலோமீனையும் 2 ஆயிரம் லீற்றர் டீசலையும் படையினர் பறிமுதல் செய்தனர். (ஒ)

# 27 பொலீஸாருக்கு திடீர் சுகவீனம்

## உணவகம் மூடப்பட்டது

கொழும்பு, ஓக. 3

குருநாகல் பொலீஸ் பயிற்சிக் கல்லூரி உணவகத்தில் உணவு உட்கொண்ட 27 பொலீஸார் திடீரென சுகவீனமுற்றனர்.

இதனை அடுத்து அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக, குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

உணவகமும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

எனினும் இந்த 27 பேரும் சுகவீனம் அடைந்ததற்கான காரணம் என்னஎன்பதுபற்றி தெரிவிக்கப்படவில்லை.

# ஈ. பி. டி. பியினருடன் செஞ். பிரதிநிதிகள் பேச்சு

கொழும்பு, ஓக.3

"செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் சேவை எமது நாட்டுக்கு, குறிப்பாக வடக்குக்குத் தேவை. எந்த இடர்கள் ஏற்படினும் உங்கள் சேவையை நீங்கள் நிறுத்தி விடக் கூடாது"

ஈ. பி. டி. பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தா எம். பி. கடந்தவாரம் தம்மைச் சந்தித்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார்.

ஐ. சி ஆர்சியின் இலங்கைப் பிரதிநிதி மார்க்கோ: அல்தரும் மற்றொரு பிரதிநிதியும் டக்ளஸ் தேவானந்தாவை ஈ. பி. டி. பியின் தலைமையகத்தில் சந்தித்து வடபகுதி நிலைமை பற்றிப் பேசினர். இச்சந்திப்பில்யாழ். மாவட்ட எம் பி. எஸ். சிவதாஸனும் பங்கு கொண்டார். [ஒ]

# திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ். திறந்த பல்கலைக்கழக உயர் தொழில் ஆங்கிலம் ஆரம்பக் கற்கை நெறி சார் கூட்டசகல மாணவர்களையும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை9மணிக்கு யாழ் பிராந்திய நிலையத்தில் கூடுமாறு பிராந்திய இயக்குநர் அறிவிக்கின்றார். (எ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிவப்பு சேவல் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இறைச்சிக்கோழி விற்பனை நிலையம், 15/7, முருகேசர் வீதி. நல்லூர் [37824]

பால் எடுக்கும் யமுனாபாரி ஆடும், கடா குட்டியும், குட்டி ஈனவுள்ள யமுனாபாரி சனன் ஆடுகளும் விற்பனைக்குண்டு. கனகசிங்கம், இல. 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (37839)

நல்ல இனப பசுமாடு விற்பனைக்கு உண்டு. இடம் சுன்டிக்குளி மகளிர் கல்லூரி. [சி-1977]

கடைக்குரிய சோகேஸ் வகைகள், குசன் செற்றிகள், அலுமாரி மற்றும் வீட்டுத் தளபாடங்கள். குறிஞ்சி மருந்தகம் (அருகில்) பரமேஸ் வராச்சந்தி, திருநெல்வேலி. [37838]

### கோழிக்குஞ்சு விற்பனை

Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் பதிவு செய்து 6 - 8 - 95 ஞாயிற்றுக்கிழமை பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி. நல்லூர். (37826)

### விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T. V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, கிறான்விவீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். இல: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1975]

### தேவை

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹோர்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-1967)

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் II பிரிவு 'பி' பதவிக்கான பரீட்சை

1995-07-15ஆம் திகதி நடைபெற இருந்த மேற்படி பதவிக்கான பரீட்சை நாட்டின் சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டு மீண்டும் 1995-08-19ஆம் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெற உள்ளது என்பதனை அறியத் தருகின்றேன். பரீட்சார்த்திகளுக்குத் தனிப்பட்ட முறையிலும் இது சம்பந்தமாக அறிவிக்கப்படும்.

-பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995-07-28.

[சி/1979]

### கோழிக்குஞ்சு விற்பனை

ஹைலைன் பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் தடுப்பூசி போடப்பட்டு ஒரு மாதம் வளர்க்கப்பட்டவை விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (Bar முன்பாக) (37842)

## அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3

தெல்லிப்பளை தொலைக்கல்வி நிலைய, ஆசிரிய மாணவர்களை நாளை வெள்ளிக்கிழமை முற்பகலில் இணுவில் மத்திய கல்லூரிக்கு சமுகம் தரும்படி சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார். (எ)

## தொண்டா கருத்து

கொழும்பு, ஓக. 3

அரசியல் தீர்வு குறித்து எனக்கென திட்டவட்டமான கொள்கை உண்டு. அரசின் தீர்வுத் திட்டம் முழுமையாக வெளியான பின்னரே அது பற்றிக் கருத்துக் கூறுவேன்.

அமைச்சரும் இ. தொ. கா தலைவருமான எஸ். தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசின் உத்தேச தீர்வுத் திட்டம் தொடர்பாக கருத்து கூறுமாறு கேட்டதற்கு அவர் இவ்வாறு கூறியதாக கொழும்பு பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி உள்ளது. [எ-ஐ]

## 'வெளிச்சம்' நாளை வெளிவரும்

யாழ்ப்பாணம், ஓக. 3

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக சஞ்சிகையின் ஆடி — ஆவணி இதழ் நாளை வெளிவருகின்றது.

இந்த இதழ் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் 'மக்கள் சமூகம் விழிப்படையும் போது விடுதலை சாத்தியமாகிறது' என்ற கருத்துரையுடன் பேராசிரியர் கா. சிவத்தம்பியுடனான நேர்காணல் மற்றும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் போன்ற சிறப்பு அம்சங்கள் இடம்பெறுகின்றன. [ஒ]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



### திருமதி சண்முகம் செல்லம்மா

தோற்றம்: 02 — 12 — 1900
மறைவு: 04 — 07 — 1995

அன்பால், பண்பால், அறிவால் எம்மை வழி நடத்தி வாழ்வூட்டிய எங்கள் அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து 31 நாட்கள் கடந்தாலும் அவரின் பாச நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலா.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பல்வேறு வகைகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று [03 - 08 - 95] வியாழக்கிழமை காலை 10 மணிக்கு எமதில்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியம், மதியபோசனம் ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
மகள்: அன்னபூரணம்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், பெறாமக்கள்,

செல்லத்துரை வீதி,
உரும்பிராய்.

[37825]

## பெயர் மாற்றம்

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட
தொ. நு. க. மாணவனாகிய
முருகேசர் தர்மரத்தினம்
ஆகிய நான் 03 - 08 - 95 இல் இருந்து எனது பெயரை
**முருகேசர் ஐயந்தன்**
என மாற்றிக் கொண்டுள்ளேன்.

— மு. ஐயந்தன்

(37828)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 17 — 08 — 1931



விண்ணில்: 03 — 08 — 1994

### இறப்பியேற்பிள்ளை இம்மானுவேல்

(காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் நேரக்கணிப்பாளர்)

எமக்காக எம்முடன் வாழ்ந்து
எம்மை வாழவைத்த தெய்வமே!
உம்மை எந்நாளும் மறவோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக துன்னாலை வடக்கு சதாசகாய மாதா ஆலயத்தில் இன்று (3 - 8 - 1995) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியிலும், அன்று மதியம் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உறவினர்கள், நண்பர்களை அழைக்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரி, சகோதரர்கள்
மைத்துனர்கள், உறவினர்கள்.

புலோலி தெற்கு,
புலோலி.

(37818)

புங்குடுதீவு – கிழக்கு

## கலட்டி - ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

★ ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம் 04-08-95 வெள்ளி ★
[ நாளை ]

சிவபதமடைந்த செம்மல்
சிவஸ்ரீ பஞ்சாட்சர - கணேசராஜக் குருக்கள் அவர்களினால்
மேற்படி தேவஸ்தானத்தில் தொடக்கி வைக்கப்பட்ட இவ்விரதத்தைப்
பக்தி சிரத்தையுடன் அனுஷ்டிக்கும் அடியார்களின் வசதி கருதி வழமைபோல்
இம்முறையும்
தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலயத்தில்
கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்
ஸ்ரீ கஜலக்ஷ்மி அம்பாள் சந்நிதானத்தில்
எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

முற்பகல் 11 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும்
இவ்விரத வைபவத்துக்கான கிரியைகளை
சிவஸ்ரீ கு பரமசிவக்குருக்கள் அவர்கள்
நிறைவேற்றி வைப்பார்கள்,
மாலவன் மார்பில் வாழும் மங்கலச் சமலச்
செல்வியின் அருள் பெற்றுய்ய
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி தனராஜ் பிறேம் சந்திரிக்கா,
திருமதி சிவகுமார் பிறேம் ஜெயா,
உபயகாரர்கள்.

[37841]

உதயன்
192/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தீர்வும் திட்டமும்

இனப்பிரச்சினைக்கான அரசாங்கத்தின் தீர்வு யோசனையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இன்று உத்தியோக பூர்வமாக நாட்டு மக்களுக்கு அறிவிக்கிறார்.

இத்தீர்வு யோசனையின் நகல் உத்தியோகப்பற்றற்ற முறையில் கடந்த வாரமே கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவந்தது. அந்த நகலுக்கும் ஜனாதிபதி அறிவிக்கவிருக்கும் அசலுக்கும் இடையில் வித்தியாசம் இருக்குமா இல்லையா என்பது இன்று தான் தெரியவரும்.

அரசாங்கத்தீர்வு யோசனையின் அசலின் விவரம் வெளிவருவதற்கு முன்னர் அது குறித்துக் கருத்துச் சொல்வது பொருத்தமல்ல.

அரசாங்கத்தின் தீர்வு யோசனை குறித்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுடன் சந்திரிகா நேற்று ஆலோசனை நடத்தினார். தொடர்ந்து இன்றும் நடத்தவுள்ளார்.

தமது தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் ஆதரவைப் பெறும் நோக்குடன் ஜனாதிபதி அவற்றுடன் ஆலோசனை நடத்தக்கூடும்.

அவ்வாறு நிறைவேற்றப்பட்டாலும், மக்கள் மத்தியில் நடத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பிலும் தீர்வுக்கு ஆதரவு பெறவேண்டும் என்பது ஒருபுறம்.

அரசியல் தீர்வு யோசனை குறித்து விடுதலைப் புலிகளுடன் ஆலோசனையோ பேச்சுவார்த்தையோ நடத்தப் போவதில்லை என்ற தொனியில் —

தீர்வு யோசனையின் பிரதம சிற்பியான அமைச்சர் ஜீ எல். பீரிஸ் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ஆனால் விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசிக்காமல், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் அவர்களின் சம்மதத்தை அல்லது அங்கீகாரத்தைப் பெறாமல் தீர்வுத் திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது?

தீர்வுத் திட்டத்தை எழுத்தில் நிறைவேற்றிவிட்டால் போதுமா? அதனை நடைமுறைப்படுத்துவதில் தானே அதன் வெற்றி தங்கியுள்ளது. மாகாணசபைமுறை வடக்கு-கிழக்கில் செயற்படாமல் இருப்பதைப் பார்த்தேனும் சந்திரிகாவும், பீரிஸும் பாடம் படிக்காதது ஏன்?

தென்னிலங்கையில் எதிர்ப்பு இல்லாமலோ அல்லது எதிர்ப்புகள் தடைகளைத் தாண்டியோ இத்தீர்வு யோசனை நிறைவேற்றப்படும் என்று பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும்—

அதனை நடைமுறைப்படுத்த புலிகளின் ஆதரவு தேவை என்பதே யதார்த்தம். விடுதலைப் புலிகளைப் போரில் வென்ற பின்னரே தீர்வுத் திட்டம் அமுல் செய்யப்படும் என்பதுதான் அரசின் நிலைப்பாடு என்றால்—

போர் என்ற போர்வையில் தமிழர்களை அழித்தவிட்டே அரசு தீர்வை நடைமுறைக்குக் கொண்டு வரப்போகிறது என்றே அர்த்தம்.

போரை முடித்துக்கொண்டு தான் தீர்வை அமுல் செய்வதாயின் அது குறித்து இப்போது அலட்டிக் கொள்வது ஏன்? போருக்கு சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு தானே...?!

# ஹங்கேரியில் கைதான 19 பேரும் விரைவில் திருப்பி அனுப்பப்படுவர்

## உயிரிழந்தவர்களின் அஸ்தி அடுத்த வாரம் வரும்

கொழும்பு, ஓக. 3

அண்மையில் ஜேர்மனிக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்றவேளை "டிரக்" இழுவை வண்டி ஒன்றினுள் இருந்து உயிருடன் மீட்கப்பட்ட 19 பேரும் இலங்கைக்குத்திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

இவர்களில் சிலர் இலங்கைக்குத் திரும்ப மறுத்து ஹங்கேரி அரசிடம் அரசியல் தஞ்சம் கோரிய பொழுதிலும் அதற்கான சாத்தியம் அங்கு இல்லை என்று ஹங்கேரியில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரி தெரிவித்தார்.

ஹங்கேரி பொலீஸாரால் கைதாகியுள்ள இந்த 19 பேரில் 14 பேர் தமிழர்கள்; 4 பேர் சிங்களவர்கள்; ஒருவர் முஸ்லிம்.

இச் சம்பவத்தில் "டிரக்" இழுவை வண்டியினுள் மூச்சுத்திணறி உயிரிழந்த 18 பேரில் 15 பேரின் உடல்கள் ஹங்கேரியில் தகனம் செய்யப்பட்டன.

இவர்களின் அஸ்தி இலங்கையில் உள்ள உறவினர்களிடம் கையளிப்பதற்காக அடுத்த வாரமளவில் இங்கு எடுத்து வரப்பட உள்ளது.

*ஏழு இலங்கையர் விசாரணையில்*

இதேவேளை —

இச்சம்பவம் தொடர்பாக ஏழு இலங்கையர்களை பல்கேரிய பொலீஸார் கைது செய்துள்ளனர். அத்துடன் ஹங்கேரி — பல்கேரிய எல்லையில் பல்கேரிய பொலீஸார் சோதனைகளை நடத்தி வருகின்றன.

இலங்கையர்களை ஜேர்மனிக்குள் கொண்டு செல்ல உதவிய முகவர்களான ராஜயோகன், மனோஜ், ஆரியரத்னா ஆகிய இருவரும் இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். [ஐ]

## ஆளடையாளத்தை நிரூபிக்க பரீட்சைக்கு புகைப்படமும் சமர்ப்பிக்க முடியும்

### பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு ஓக. 3

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க, கடவுச்சீட்டு அளவிலான இரு புகைப்படங்களையும் பயன்படுத்த முடியும் என பரீட்சை ஆணையாளர் திரு. பீ. சி. ஆர். பி. குணரத்ன தெரிவித்துள்ளார்.

இப் புகைப்படங்களை பாடசாலைப் பரீட்சார்த்திகள் அதிபர் மூலமாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கிராம சேவையாளர் மூலமாகவும் பின்னர் உதவி அரச அதிபர் மூலமாகவும் உறுதி செய்து, அவற்றின் ஒரு பிரதியை பரீட்சை மேற்பார்வையாளரிடமும், மறு பிரதியை பிரதேசக் கோட்டக் கல்விப் பணிப்பாளரிடமும் ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஓக. 3

வண்ணை. ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் ஸ்ரீ வரலெட்சுமி உற்சவமும் விரத வழிபாடும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் நடைபெறும். (ஐ)

## யாழ்ற்ரன் கல்லூரி மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 3

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் ஜி சீ ஈ சாதாரண பரீட்சைக்கு முதல் முறையாகவும் இரண்டாவது முறையாகவும் தோற்றவுள்ள மாணவர்களையும்—

ஆண்டு ஒன்பதில் கல்வி பயிலும் மாணவர்களையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். [ஐ]

## அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால்

# இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் விடுதலை பெற்ற இனமாகி விடுவோம்

### நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி

யாழ்ப்பாணம், ஓக. 3

விடுதலை கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும் அனைத்து மக்களும் எம்முடன் ஒன்றிணைந்து செயல்பட்டால் இந்த நூற்றாண்டின் முடிவுக்குள் நாம் விடுதலை பெற்ற இனமாகிவிடுவோம்.

விடுதலைப்புலிகள் நிதித்துறைப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி இவ்வாறு குறிப்பிட்டார்.

இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற அனைத்து திணைக்கள ஊழியர்களுக்கான மேற்படி கூட்டத்தில் தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது:

காவியுடையைக் களைந்து காக்கியுடையணிந்து புத்தபிக்கு போருக்குப் போகிறார் நாங்கள் என்ன செய்கிறோம். புத்தபிக்குகளும் சாதாரண சிங்களவரும் எம்மை நசுக்குவதற்கு கோடி கோடியாக அள்ளிக் கொடுக்கிறார்கள். இந்நிலையில் எங்கள் ஒவ்வொருவரினதும் கடமை என்ன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இந்த அரசும்சரி, இதற்கு முன்னைய அரசுகளும் சரி, தமிழினத்தை அழிப்பதையே குறியாகக் கொண்டு செயற்படுகின்றன. ஒருபுறம் பொருளாதாரத்தடைகளைப் போட்டுக் கொண்டு மறுபுறம் நவீன ஆயுதங்களை வாங்கிக் குவிக்கின்றன. இந்நிலையில் அதற்கு மாற்றீடான புதிய கருவிகளை நாமும் பெற வேண்டியுள்ளது.

ராணுவத்தின் கொடுமைகளுக்கு உள்ளாகாமல் உயிர் தப்பிவிட வேண்டும் என்பதற்காக எவ்வளவு பெறுமதியான சொத்துக்களைக் கைவிட்டு ஓடிவருகிறோம் அவற்றில் ஒரு பகுதியையாவது எமது விடுதலைக்காக நாம் வழங்கினால் எமது இனம் நிம்மதியாக வாழும் நிலை ஏற்படும்.

இன்று தமிழகத்தில் கூட தமிழர்கள் அடிமைகளாகவே வாழுகிறார்கள். தமிழே தெரியாத அளவுக்கு அங்கே தமிழர்கள் இருக்கிறார்கள். தமிழ் அங்கே சிதைந்து விட்டது.

உங்கள் ஒத்துழைப்புடன் இந்த நாடு விரைவில் விடுதலையடையும் போது இங்கே வாழும் பதினைந்து லட்சம் தமிழர்கள் மட்டுமல்ல உலகெங்கும் வாழும் எட்டுக்கோடி தமிழர்களுக்குமே விடுதலை கிடைக்கும்.

*எரிற்றிய மக்கள் போராட்டம்*

விடுதலைப் போரில் இறப்புக்கள் வருவது சகஜம். இதுவரை சுமார் நாற்பதாயிரம் பொது மக்கள் வரை இறந்துள்ளனர். நீங்கள் எம்முடன் இணைந்தால் இந்தச் சாவுகளின் எண்ணிக்கை குறையும்.

எரிற்றிய மக்கள் சலிப்பின்றிப் போராடி விடுதலை பெற்றார்கள். மிகப் பெரிய அமெரிக்க வல்லரசை எதிர்த்து வியட்நாமிய மக்கள் போராடினார்கள்.

இஸ்ரேலர்களால் என்ன செய்து விட முடியும். இஸ்ரேலர்களை விட சிறந்த மூளைவளம் பெற்றவர்கள் தமிழர்கள். அந்த மூளையை உரிய முறையில் நாம் பயன் படுத்தாததினாலேயே இந்தநிலை.

இப்படி அவர் கூறினார். [இ-111]

## நல்லூர் மத்திய மருந்தகம்

கொழும்புத்துறை ஓக. 2

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மேற்கு வீதியில் அமைந்திருக்கும் அரசினர் மத்திய மருந்தகம் அடியார்கள், பொதுமக்கள் நன்மை கருதி தினசரி காலை 7-00 மணி தொடக்கம் மாலை 7-00மணிவரை திறந்திருக்கும்.

இங்கு நோயாளர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்து மருந்துகளைப் பெற்றுக் கொள்ளலாம் என மருந்தகப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எஸ். பரராசசேகரம் தெரிவித்துள்ளார்.

## வேலைத் திட்ட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் ஏப்ரல், மே, ஜூன் உள்ளிட்ட இரண்டாம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட சுகாதார வேலைத் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் மத்திய மருந்துக் களஞ்சிய மண்டபத்தில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-4]

# வதந்திகளை நம்பி இடம் பெயராதீர்!

### பொது மக்களுக்கு வேண்டுகோள்

சண்டிலிப்பாய், ஓக. 3

வீண் வதந்திகளை நம்பி வீடு, வாசல்களை விட்டு இடம் பெயர்ந்து செல்ல வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஒலிபெருக்கி மூலம் சங்கானை, சித்தன்கேணி, மூளாய், வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள மக்களுக்கு நேற்று முன்தினம் வேண்டுகோள் விடுத்தனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் தங்கள் வீடுகளிலுள்ள முக்கிய பொருள்களை ஏற்றிக் கொண்டு தூரமான இடங்களுக்கு சென்று கொண்டிருப்பதை தொடர்ந்து இந்த கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வீதி வீதியாக ஒலிபெருக்கி பூட்டிய வாகனத்தில் சென்று இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வீண் வதந்திகளை பரப்புவோர் மீது கடும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-135]

## வவுனியாவில் 3மாதவதிவிட பாஸ்வழங்குவது நிறுத்தம்

வவுனியாவில் தற்காலிகமாக வசிப்போருக்கு மூன்று மாத காலத்திற்கான "வதிவிடபாஸ்" வழங்கும் முறை நிறுத்தப்பட்டுள்ளதனால், வெளியிடங்களில் இருந்து வந்து இங்கு தங்கியிருப்போர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

வவுனியாவில் நிரந்தரமாக வாழ்ந்து வருவோருக்கு இராணுவத்தினர் நிரந்தர "வதிவிடபாஸ்" வழங்கியுள்ளனர். தற்காலிகமாக வசிப்போருக்கு 3 மாத கால பாஸ் வழங்கப்பட்டுவந்தது.

3 மாத பாஸ் நிறுத்தப்பட்டுள்ளதால், வவுனியாவுக்கு வந்து தொழில்செய்வோர் மற்றும் அகதிகளாக தங்கி இருப்போர் என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடுகின்றனர்.

இவர்களுக்கு 7 நாள்களுக்குரிய பாஸ் மட்டுமே பெரும் கெடுபிடிகளுடன் தற்போது வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. [ஒ]

## தேசிய பாதுகாப்பு நிதி செலுத்தும் இடங்கள்

- **வலிகாமம்:** வருவாய்ப் பகுதிச் செயலகம், பலாலி வீதி, கந்தர்மடம்.
- **தென்மராட்சி:** வருவாய்ப் பகுதிச் செயலகம், கச்சாய் வீதி, சாவகச்சேரி.
- **வடமராட்சி:** வருவாய்ப் பகுதிச் செயலகம், பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

### கொழும்பில் பொலீஸாரால்

## "ஓட்டோ" சாரதிகளின் புகைப்படங்கள் சேகரிப்பு

கொழும்பு, ஓக. 8

கொழும்பு நகரில் "ஓட்டோ" மற்றும் வாடகை வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளின் புகைப்படங்களைப் பொலீஸார் சேகரித்து வருகின்றனர்.

கொழும்புக்குள் ஊடுருவியுள்ள விடுதலைப்புலிகள் வாடகை முச்சக்கர வண்டிகள் கார்கள், வான்கள் என்பவற்றைப் பயன்படுத்தி வருவதாகக் கிடைத்துள்ள தகவல்களை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான வாடகை வாகனங்களைச் செலுத்தும் தமிழர்களின் புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டு வாகன இலக்கங்களும் பதிவு செய்யப்படுவதாக பிரதிப் பொலீஸ்மா அதிபர் கொட்டகதெனியா தெரிவித்துள்ளார். [ஐ-10]

### வவுனியா ஆஸ்பத்திரிக்கு

## மருந்து அனுப்பாவிடின் போராட்டம் நடத்த முடிவு

வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு அவசரமாகத் தேவைப்படும் மருந்துவகைகளை உடனடியாக அனுப்பி வைக்குமாறும்—

10 நாள்களுக்குள் அவை அங்கு வந்து சேராவிட்டால் தாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப் போவதாகவும் ஆஸ்பத்திரி மதியுரை குழு சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

கடந்த ஞாயிறன்று டாக்டர் ரி. முத்துலிங்கம் தலைமையில் கூடிய ஆஸ்பத்திரி மதியுரை குழு இது தொடர்பாக தீர்மானம் எடுத்தது.

அதன் பின்னர் சுகாதார அமைச்சருக்கும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இது குறித்து அவசர கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. (ஐ)

### எஞ்சிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வினாத்தாள்கள் எடுத்துவரப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் சனிக்கிழமை திருகோணமலையில் வைத்து அவை கப்பலில் ஏற்றப்பட்டு மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறைக்கு எடுத்துவரப்படும்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடைபெறும் பாடங்களுக்கான வினாத்தாள்களே எடுத்துவரப்படுகின்றன. (ஐ-3)

### விலபத்து..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ உயர் மட்டத்தின் விசேட உத்தரவின்படி முகாம் மூடப்பட்டதாகவும்—

முகாம் அமைந்திருந்த கட்டடங்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டதாகவும் "தினமின" பத்திரிகை தெரிவித்துள்ளது.

அங்கிருந்த சிப்பாய்கள் வேறு முகாமுக்குச் சென்றுள்ளனர்.

முகாம் மூடப்பட்டதால் அப்பகுதி கிராம வாசிகள் அச்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகாமை அகற்றினால் அப்பிரதேசம் முற்றாகப் பாதுகாப்பை இழக்க நேரிடும் என வடமேல் மாகாண முதலமைச்சர் தெரிவித்திருந்தார். அவரது அந்தக் கருத்து புறக்கணிக்கப்பட்டு முகாம் அகற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## மரண அறிவித்தல்

### செல்லையா ஸ்ரீரங்கநாதன்

[ஓய்வுபெற்ற, இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர்]

கொடிகாமத்தைச் சேர்ந்த செல்லையா ஸ்ரீரங்கநாதன் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம் செல்லையா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), செல்வலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மகனும், புஷ்பராணியின் அருமைக் கணவரும்; ஜீவன், வரதன், வதனா, நிருபா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05-08-95 சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
திருமதி ஞானம் வாரித்தம்பி.
'பரணி',
மீசாலை வடக்கு,
கொடிகாமம். (37844)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03-08-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### புலிகளை எதிர்த்துப் போராட

# வெளிநாடுகளிடம் இருந்து அரசு ஆயுதம் வாங்கும்

## பாகிஸ்தானில் கதிர்காமர் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஓக. 3

விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட அரசு, வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை வாங்கும் என்று வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் இஸ்லாமாபாத்தில் தெரிவித்தார்.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றிருந்த அவர் இஸ்லாமாபாத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

அங்கு செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாது அமைச்சர் கதிர்காமர் திணறினார் என்று பி. பி. ஸி தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுடன் போராட எந்த எந்த நாடுகள் ஆயுதங்களை வழங்குகின்றன எனக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்க அமைச்சர் மறுத்துவிட்டார்.

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சருடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பான விடயங்களை வெளியிடவும் அவர் மறுத்தார்.

நீண்டகாலமாக பாகிஸ்தான் தமது படையினருக்கு பயிற்சி அளிப்பதாக மட்டுமே அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு இந்தியா உதவுவதாக கூறப்படுவதையும் அமைச்சர் கதிர்காமர் மறுத்தார்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வு காண்பது தான் அரசின் குறிக்கோள் என்றும் அமைச்சர் கதிர்காமர் தெரிவித்தார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் சிம்லா ஒப்பந்தத்தின் கீழ் இருதரப்பு அடிப்படையில் தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

### வடமராட்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வர் வல்வை இந்திராணி வைத்தியசாலையிலும், மூவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

ஐயாத்துரை சிவராஜா (வயது 36) மாவடி, வல்வை.

கதிரிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (வயது 76] ஏ ஜீ.ஏ லேன் வல்வை.

மா. சிவாஜி (வயது 32) வேம்படி, வல்வை.

தவசமணி செகுந்தரா [வயது 20) பொலிகண்டி.

பரஞ்சோதி சுதாகரன் [வயது 14) கொற்றாவத்தை.

சிதம்பரப்பிள்ளை கனகசபை[வயது 72)பொலிகண்டி.

ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

#### அதிர்ச்சியால் மரணம்

சரமாரியான பீரங்கித் தாக்குதலினால் அதிர்ச்சி அடைந்த புலோலி மேற்கைச் சேர்ந்த வயோதிப மாது ஒருவர் மரணமானார்.

கடற்படையினரின் தாக்குதலில் வல்வை இந்திராணி வைத்தியசாலைக்கும் சேதம் ஏற்பட்டது. வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் விழுந்து வெடித்த பீரங்கிக் குண்டினால் வைத்திய அதிகாரியின் அலுவலக அறை சேதமடைந்தது.

#### ஆலயங்களும் சேதம்

வல்வை அம்மன் கோவில், சிவன் கோவில் கோபுரங்கள், நெடியகாடு பிள்ளையார் கோவில், வல்வை மகளிர் மகாவித்தியாலயம், ஊறணி தீர்த்தக்கரை மடம், பொலிகண்டி கந்தசுவாமி கோவில் வசந்த மண்டபம் ஆகியனவும் நேற்றைய தாக்குதல்களால் சேதமடைந்தன.

வதிரி ஆலங்கட்டைப் பகுதியில் மாட்டுக் கொட்டில்மீது ஷெல் விழுந்ததில் மூன்று மாடுகள் காயமடைந்தன.

பொலிகண்டி, கொற்றாவத்தை, சமரபாகு, நவிண்டில், உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

சமரபாகு அம்மன் கோவிலடியிலும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் வெடிக்காத நிலையில் ஷெல்கள் காணப்பட்டன.

கடற்படையினரின் தாக்குதல்களை அடுத்து நேற்றுக் காலை தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் அவசர அவசரமாகக் கரை திரும்பினர்.

தாக்குதல்கள் இடம்பெற்ற போதிலும் வடமராட்சி பகுதி பாடசாலைகளில் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை தடையின்றி நடைபெற்றது. [ஐ-இ-155-173-15]

### தீர்வுத் ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யைவிடுவதாகவும்—

செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.

முக்கிய கேந்திர நிலையங்களிலும், அரச அலுவலகங்களிலும் பாதுகாப்பு மிகத் தீவிரமாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிங்கள இனவாதப் போக்குடைய ஜே.வி.பி. மற்றும் பௌத்த குருமார் அமைப்புகள் போன்றவை இத்தீர்வு யோசனைகளுக்கு எதிராக கலவரங்களில் இறங்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (உ-3)

### கேணல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

அந்த இடத்தைத் தாண்டி பல இராணுவ வாகனங்கள் சென்றன கேணல் ரத்னசபாபதியின் வாகனமும் முச்சந்தி இராணுவ முகாமுக்கும் வாழைச்சேனைக்கும் இடையில் — சம்பவம் நடந்த பகுதிக்கு ஊடாக — பல தடவைகள் சென்றது. ஆனால் கண்ணிவெடி வெடிக்கவில்லை.

சம்பவம் நடந்த சமயமும் முதலாவதாக கேணல் ரத்னசபாபதியின் ஜீப்பும் அடுத்து பிரிகேடியர் அங்கம்மனவின் வாகனமும் சென்றன. அதைத் தொடர்ந்து பெரிய வாகனங்களில் பாதுகாப்புக்குச் சென்ற சிப்பாய்கள் சென்றனர்.

முச்சந்தி முகாமிலிருந்து வாழைச்சேனை நோக்கி வந்து கொண்டிருந்தபோது— வாழைச்சேனைக்கு இரண்டு கிலோ மீற்றர் தூரம் இருக்கையில்—

அங்கம்மன சென்று கொண்டிருந்த வாகனத்திற்குக் கீழ் நிலக்கண்ணி வெடித்தது.

அங்கம்மன அமர்ந்து இருந்த இருக்கைப் பக்கமே கண்ணிவெடி வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

கண்ணி வெடியை தூர இடத்திலிருந்தவாறே வெடிக்க வைத்த நபர், அது வெடித்ததும் அப்பகுதியிலிருந்து ஓடித் தப்பியிருக்க வேண்டும் என்றும் அப்பத்திரிகைச் செய்தி குறிப்பிட்டது.

இதற்கிடையில்—

கொல்லப்பட்ட நளின் அங்கம்மனவின் இடத்துக்கு புதிய மட்டக்களப்பு இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் எச். எஸ். ஹப்பு ஆராய்ச்சி நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (உ-௧)

### கட்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிரதிநிதிகளையும்—

பிற்பகலில் ஈ பி. டி. பி., புளொட், முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளையும் ஜனாதிபதி சந்தித்து தீர்வு யோசனைகளை விளக்கினார். (ஐ-3)

## பார்த்தசாரதி காலமானார்

புதுடில்லி, ஓக. 3

பிரபல ராஜதந்திரியும்கல்விமானுமான ஜி. பார்த்தசாரதி நேற்று முன்தினம் புதுடில்லியில் காலமானார். அவருக்கு வயது 83.

இந்தியாவின் வெளி விவகார அமைச்சில் பல முக்கிய பதவிகளை வகித்த இவர் — 1983 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக இலங்கை அரசுத் தலைவர்களுடன் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் விசேட பிரதிநிதியாகச் சென்றுபேச்சு நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-௧)

### வேறு பெயரில் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

ஹடிகல்லே பஞ்ஞா திஸ்ஸ தேரோ, ஹல்பே சித்தானந்த தேரோ, பதுல் லேகமசிறி விமல தேரோ ஆகியோர் கையொப்பமிட்டு அந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

"திவயின" பத்திரிகையில் வெளியாகியுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு- கிழக்கு பிரச்சினை தொடர்பான தனது கருத்துக்களை மகா சங்கம் முன்னைய அரசுக்குத் தெரிவித்திருந்தது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபை முறையை முன்னைய அரசு அறிமுகப் படுத்தியதை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராயிருந்த சிறிமா பண்டாரநாயகா எதிர்த்தார் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா அப்போது இந்தநாட்டில் இல்லை என்பதை நாட்டு மக்கள் அறிவர். இருப்பினும் தாயாரின் அப்போதைய நிலைப்பாட்டை அவர் அறிந்திருந்தார்.

வடக்குக் கிழக்கு இணைக்கப்படுவதை அன்றுபோல இன்றும் நாம் எதிர்க்கிறோம். வேறுபெயரில் அரசு ஈழத்தை வழங்க முற்படுவதை அவர்களது சில கருத்துக்கள் மூலம் எங்களால் உணர முடிகிறது. மக்களை ஏமாற்றும் முயற்சிகளுக்கு மகாசங்கம் ஒருபோதும் இடமளிக்காது.

எமது கருத்துக்கள் அறியப்படாவிடின் அது ஜனநாயகமாகாது. பெரும்பான்மையோரின் எண்ணங்களுக்கு மதிப்பளித்து பௌத்த சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அரசியல் சட்டமே எங்களுக்குத் தேவை.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-10]